# சேலம் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு

மாவட்ட நீதிமன்ற வளாகம், சேலம் - 636 007. தொலைபேசி : 0427 - 2420011.

## சட்ட உதவிகள் பெற தகுதியானவர்கள்

**சட்ட உதவிகள் பெறுவதற்கு முக்கிய தகுதிகள் :**

வழக்கு தாக்கல் செய்தவரோ அல்லது எதிர்வழக்கு செய்பவரோ, சட்டப்படி சட்ட உதவிகள் பெற தகுதியானவர்கள் ஆவார்கள். அப்படி உதவி பெற அந்த நபர்கள் கீழ்கண்ட தகுதிகள் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

1. ஒருவர் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் மலைவாழ்குடி பிரிவினை சேர்ந்தவராக இருக்க வேண்டும்.
2. அரசியலமைப்பு சட்டம் சரத்து 23-ல் குறிப்பிடப்பட்டுள்ள பிச்சைக் காரர்கள் மற்றும் ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டோர்.
3. பெண்கள் அல்லது குழந்தைகள்.
4. 1995-ஆம் ஆண்டு ஊனமுற்றவர்கள் (சமவாய்ப்புகள், உரிமைகள், பாதுகாப்பு மற்றும் முழுபங்கேற்பு) சட்டம் பிரிவு 2 சரத்து (1) ன் படி குறிப்பிட்டுள்ளபடி உள்ள ஒரு ஊனமுற்றவர்.
5. பேரழிவு, இனகிளர்ச்சி, சாதி வன்கொடுமை, வெள்ளம், பஞ்சம், நிலநடுக்கம், தொழில் அழிவு ஆகிய எதிர்பாராத நிகழ்ச்சிகளால் பாதிக்கப்பட்ட நபர்.
6. தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளி.
7. சிறைக்காவலில் இருப்பவர் அல்லது பாதுகாப்பு இல்லம், இளம் சிறார்கள் இல்லம், மனநல மருத்துவமனை, மனநல காப்பகம் ஆகிய இடங்களில் சட்டப்படி காவலில் வைக்கப்பட்டவர்.
8. பிரிவு 12 (எச்) இல் குறிப்பிட்டப்படி ஆண்டு வருமானம் ரூ. 3,00,000/-க்கு (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) மிகாமல் உள்ளவர்கள்.

*மேற்குறிப்பிட்ட தகுதிகள் பெற்ற நபர் யாராக இருந்தாலும், அடிப்படையாக ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணங்களாக இருந்தால், அவர்கள் வழக்கு தொடரவும், எதிர்வழக்கு நடத்தவும் சட்ட உதவி பெற தகுதியுடையவர்கள் ஆவார்கள்.*

**சட்ட ஆலோசனை இலவசமாக பெறலாம்**

PODHIGAI

வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு பொதிகை டிவியில்
**நீதிமன்றச் செய்திகள்** நிகழ்ச்சியை பார்த்து பயனடையுங்கள்

**இலவச அழைப்பிதற்கு : 1800 425 2441**